*சி.ஆர். எம்.பி. 5836/2019*
*பெயர் உறாசாமுகைதீன்*
*தேதி 22.11.2019*

*எனது பெயர் உறாசாமுகைதீன் நான் பேட்மாநகரத்தில் வசிக்கிறேன். எனக்கு மூன்று குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்கள் முறையே 9ஆம் வகுப்பு 7ம் வகுப்பு,5ம் வகுப்பு பேட்மாநகரத்தில் உள்ள எம்.எம். மெட்ரிக் பள்ளியில் படிக்கிறார்கள். நான் திருநெல்வேலியில் 5 கடை வைத்து நடத்தி வருகிறேன். பள்ளியில் கட்டணம் அதிகமாக இருந்ததால் இதுகுறித்து எஸ.எம.வி .சாகுல்அமீதிடம் கேட்டபோது அவர் அப்படிதான் இருக்கும் உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் என்று கூறினார். பின்னர் நான் புதுக்கோட்டை கல்வி அலுவலர் திருமதி வசந்தா என்பவரிடம் இதுகுறித்து தகவல் சொன்னேன் அவர் 23.05.2019ம்தேதி பள்ளிக்கு வந்தார் அவர்ய பள்ளிக்கு சாதகமாக பேசினார். எனவே மாவட்ட ஆட்சியரிடம் போய் தகவல் சொன்னேன், மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுப்பதாக சொன்னார். பின்னர் நக்கீரன் பத்திரிக்கையில் இதுகுறத்து செய்தி வந்தது இதுகுறித்து பள்ளியில் ஒரு பெற்றோர்கள் ஆசிரியாகள் சந்திப்பு நடைபெற்றது அதில் 5 ஆயிரம் ரூபாய் லஞ்சம் கொடுத்து நக்கீரன் பத்திரிக்கையில் செய்தி வரவைத்ததாக சந்திப் சாகுல்உறமீது கூறினார். பள்ளியை மூட வேண்டும் என்று நோக்கத்துடன் நான் செயல்படுவதாக ஆயிரம் பேர் பங்கேற்ற அந்த சந்திப்பில் கூறினார். அந்த நிகழ்ச்சி முடிந்ததும் அனைவரும் எனக்கு அலைபேசியில் இதுசம்மந்தமாக கேட்டார்கள் .இதுசம்மந்தமதாக கேட்டது எனக்கு மன உளைச்சலாக இருந்தது. எனது வீட்டில் இருக்கும் போதுகூட விசாரித்தார்கள். தற்போது வீட்டிற்கு கூட வராமல் திருநெல்வேலியிலேயே பணி செய்து வருகிறேன். நான் மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்தது சம்மந்தமாக கல்வி அலுவலர் வசந்தா என் மச்சினன் யூனிஸ்உறாஜியை கடையில் வைத்து மிரட்டினார்கள். இதுசம்மந்தமதாக முதல் தகவல் அறிக்கை வசந்தா, எஸ்எம.பி.சாகுல்உறமீது, செங்கோட்டையன், மற்றும் இருவர் மீது பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது. இதுசம்மந்தமாக எனக்கு மிகவும் மன உளைச்சல் ஏற்பட்டது.*